

# மணப்பாறையைச் சுற்றி

அ. சாதிக்பாட்சா

திருச்சி மாவட்டத்தில் உள்ள மணப்பாறை முறுக்குக்குப் பெயர் பெற்றது. இதுதவிர, 'மணப்பாறை மாடு கட்டி மாயவரம் ஏறு பூட்டி...' என்று சினிமா பாடல் வரும் அளவிற்கு விதவிதமான மாடுகளும் இங்கே அதிகம். ஆனால், இந்தப் பெயர்களை எல்லாம் மறக்கடிக்கும் விதமாக கொலைகளின் கூடாரமாகமாறிக்கொண்டிருக்கிறது மணப்பாறை.

மணப்பாறை துணை காவல்சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் சமீபகாலமாக மர்மக் கொலை சம்பவங்கள் நிறைய அரங்கேறி வருகின்றன. பல சம்பவங்களில் கொலையானவர்களைக்கூட கண்டுபிடிக்க முடியாமல் திணறுகிறது போலீஸ்.

> " காங்கிரீட் குழாய் ஒன்றில் ஒரு சாக்கு மூட்டைக்குள் எரிந்து போன நிலையில் இரண்டு உடல்கள் கிடந்தன "

திருச்சி - திண்டுக்கல் நெடுஞ்சாலையில் வையம்பட்டி அருகே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, சாலையோரம் ஒரு புளியமரத்தின் பக்கத்தில் காருக்குள் எரிந்து கருகிய நிலையில் இரண்டு பேர் பிணமாகக் கிடந்தனர். விபத்து போல் ஜோடிக்கப்பட்டிருந்த அந்த சம்பவத்தில் இறந்து கிடந்தவர்கள் திருச்சியின் பிரபல தொழிலதிபர் துரைராஜ் மற்றும் அவரது கார் டிரைவர். தடய அறிவியல் பரிசோதனையில் அந்த சம்பவம் கொலை என்று ஊர்ஜிதமானது. ரியல் எஸ்டேட் அதிபரான துரைராஜை திருச்சியின் ஆளுங்கட்சி அரசியல் வி.ஐ.பி.யின் திட்டப்படி ஒரு கூலிப்படை தீர்த்துக்கட்டியதாக பேச்சு உலவியது. இதனால், வழக்கு சி.பி.சி.ஐ.டி. போலீஸ் விசாரணைக்கு மாற்றப்பட்டது. ஆனாலும் உண்மைக் குற்றவாளிகள் இதுவரை சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

விராலிமலை - துவரங்குறிச்சி சாலையில், கான்கிரீட் குழாய் ஒன்றில் ஒரு சாக்கு மூட்டைக்குள் எரிந்து போன நிலையில் இரண்டு உடல்கள் கிடந்தன. ஆண் மற்றும் பெண் என அந்த மூட்டைக்குள் ஒரு ஜோடி பிணங்கள் இருந்தன. சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஓராண்டு ஆகிறது. ஆனால், இன்னமும் கொலையான ஜோடி யார்? அவர்களைக் கொலை செய்யக் காரணம் என்ன? கொலை செய்தது யார்? என எந்த விவரங்களையும் துப்புத் துலக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது மணப்பாறை துணை சரக போலீஸ்.

ஆறு மாதங்களுக்கு முன்பு மரவனூர் குளத்தின் அருகே கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் முப்பது வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் கொலையாகிக் கிடந்தார். 'இறந்து கிடந்தவர் யார்? அவரைக் கொலை செய்தவர் யார்?' என்று ஊர்ஜிதம் செய்யக்கூட முடியாமல் கை பிசைந்து நிற்கிறது காவல்துறை.

மூன்று மாதங்களுக்கு முன்பு மருங்காபுரி அருகே நாவலூர் மலைப்பகுதியில் ஒரு பெண் உடல் எரிந்த நிலையில் அழுகிய பிணமாகக் கிடந்தார். எரித்துக் கொலை செய்யப்பட்ட அந்தப் பெண்ணைப் பற்றிய எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை. அவரைக் கொலை செய்தவரைப் பற்றிய விவரங்களும் இன்று வரை தெரியாமல் விழி பிதுங்கிக் கிடக்கிறது காக்கி வட்டாரம்.